**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star'. UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 O Published Every Friday

Vol. 140 JAFFNA, FRIDAY, 1ST FEBRUARY, 1980 No. 5

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. 25/- per year.
Foreign Air Mail: Rs. 90/- per year.

*Apply to:*
The Manager, 'Morning Star', VADDUKODDAI.


## Niles Memorial Scholarship

A Research Scholarship in the areas of Evangelism, Mission and Ecumenism has been made available to a candidate from any one of the countries included within the Christian Conference of Asia, at the United Theological College, Bangalore.

The value of the Scholarship will be Rs. 500/- a month for 12 months in the first instance plus free tuition and accommodation.

The candidate should register for one of the following programmes:-

(1) Post Graduate Research Diploma.
(2) Studies leading to a Doctoral Degree.
(3) Post-Doctoral Research.

## Leave Cut for Public Servants

The President, Mr. J. R. Jeyawardene, met Trade Union Leaders on the subject of leave cut for public servants which came into effect this year according to Administrative Circular No. 156 which. according to the JTUAC was a serious threat to democratic rights of the working class.

The peaceful pickets were, according to Trade Union leaders, attacked inhumanly by the police and by organised thugs and that no action has been taken by the police against the attackers.

Seventeen Trade Unions attended the Conference with the President and requested the withdrawal of the circulars. No. 153 and 156. The President explained to the Trade Unions that the object of the New Scheme was to enable employees to go back home early. A high powered Committee has been appointed to review the whole matter.

## Diocesan Appointments

The Executive Committee of the JDCSI has appointed Mr. J. C. Mather Assistant Worker at the Tellippalai Church as the Warden of the Boys Home, *Arulmanai* Manipay. He also will be responsible for conducting the worship services and Sunday School at Anaicottai Church.

Mr. Kirupairajah Chelliah, a retired teacher of Tellipalai, will be in charge of the Kankesanturai Church from February 1980.

## Correction

O In last issue under "Diocesan Calendar Changes" the date of the Evangelistic Festival should read as *May 29 Thursday*, not May 39.

O "Randon Thoughts and Reflections on the CSI Synod of 1980" was written by the Rev. S. S. Arulampalam.

*New Edition of the New Testament*

## INTERNATIONAL ECUMENICAL CO-OPERATION

The orginal text of the New Testament (which was originally written in Greek) is now available in a new scholarly edition.

This *Novum Testamentum Graece* published by Dentsche Bibelstiftung in Stuggart has been welcomed as an example of ecumenical and international co-operation. Bishop Edward Lohse, Chairman of the Council of the Evangelical Church in Germany (EKD) said that it was a sign of the responsibility of theology all over the world for the church's message.

The *Novum Testamentum Graece* is the 26th edition of the "Nestle-Aland" which was first published in 1898. Since 1952 the expert work on the Greek Text has been supervised by Professor Kurt Aland in Munster.

The new edition of the New Testament is used internationally and tnter-confessionally as the homogenous basis for expert study on the New Testament. It is used by experts all over the world as the standard orginal text for translations into modern languages.

In addition to Professor Aland, the following bibilical scholars have been associated with the work of editing this new edition:- Mathew Black (St. Andrews University, Edinburgh) Father Carlo Martin (Gregorian University, Rome) Bruce M. Metzger (Princeton Theological Seminary, USA) and Allan Wickgren (Chicago University, USA).

## Arunachel Pradesh Christians

The Christians of Arunachel Pradesh have filed a Defamation case against Mr. Takar Techi who has been harassing Christians on many occasions, even to the extent of torturing some of them.

Takar Techi is accused of having sent a memorandum to the President of India which makes "false, baseless and malicious" allegations against Christian preachers.

The complainant, Mr. Nelam Taram who filed the case in the Sessions Court at Tiro, argues that the purpose and intention of these defamatory statements is to outrage the religious feelings of the people professing the Christian faith. The sentiments of the Christians in the Union Territory have been hurt by these statements.

Mr. Taram prays that adequate action be taken against Mr. Techi and the publisher of the memorandum.

*The* NI *Churchman*

## NCC of Sri Lanka

The National Council of Churches in Sri Lanka has now as its General Secretary Mr. Shirley Peiris who succeeds Mr. Sam Jegasothy, relinquishing his position as Principal of St. Mary's College, Dehiwela. The New Director of the Council's Development Commission is Mr. Shirley Candappa.

Mr. Peiris is an Anglican and member of the Standing Committee of the Church of Ceylon. He was earlier the organising Secretary of the ACUT.

Mr. Candappa is a young layman currently working in a project in Moneragaia.

The NCC has a long tradition of appointing laymen to executive positions.

## Bishop Gnanadhason Memorial

*Shalom Gardens*, situated at Thirunagar, 10 miles away from Madurai commemorates the life and work of Bishop I. R. H. Gnanadason whose cherished dream was to establish a Home for the Aged in Madurai.

This dream of the Bishop has now come true, due to the untiring efforts of a few committed christians holding responsible positions in Madurai City, Dr Sam Amirtham was the Patron of the Association which piloted the project.

The Diokanal Bureau of the Reformed Church in Holland contributed largely towards the project. Help was also forthcoming from American friends through the United Church Board of World Ministries.

The Home designed for 40 residents was dedicated in October 7, 1979 by the Rt. Rev. D. Pothirajulu, Bishop of Madurai Ramnad. It is expected to get into full swing by March this year.

The residents of the Home will pay for their meals and medical expenses, though provision has been made for subsidy in the case of deserving inmates. A significant feature of the Home is that the residents will be engaged in purposeful programmes as adult education and giving tuition to children of the weaker sections of the neigbourhood.

Sited adjacent to the Grace Church of the CSI, members will have opportunities to participate in the life of congregation.

The late Bishop Gnanadason was a frequent aisitor to Jaffna to address revival meetings. He was the Preacher and Celebrant at the Communion Service at the Consecration of the present Bishop of the JDCSI, the Rt. Rev. D. J. Ambalavanar on 30-6-71 at the Cathedral Church, Vaddukoddai.

## IN MEMORIAM

IN MEMORY OF

**Rev. R. C. P. WELCH**

(Called Home: 31-1-42)

*When Christ puts his hand*
*Upon the fevered brow of our souls,*
*We know the meaning of that touch*
*And say from the inmost depths*
"My Saviour you have come"

## CISRS Library Hours

The Study Institute Library in the Christa Seva Ashram, Chunnakam is open to friends and members on all week days including public holidays from 9 to 12 a. m. and from 3 to 6 p. m. It is closed on Sundays only.

**Sevak Sam Alfred**
Actg. Director
Christian Institute for the Study of Religion and Society,
Ashram, Chunnakam.

## Examination Success

Miss Romola Scott of Christian Medical College Vellore has passed the final MBBS examination. She now will proceed to do her internship at CMC, Vellore. Miss Scott is the daughter of Mr. & Mrs. R. R. Scott of Colombo.

## J. C. U. New Office-Bearers

The Annual General Meeting of the Jaffna Christian Union was held on Monday the 28th January 1980 in Trimmer Hall, Jaffna. The election of office-bearers which had been postponed for a number of years took place at last. The following were elected:

President:
Rt. Rev. D. J. Ambalavanar
Vice Presidents:
Mr. G. N. Edward
Mr. J. T. Chelliah
Secretary:
Rev. J. Sarvananthan
Asst. Secretary:
Rev. S. N. Sugunananthan
Treasurer:
Mr. W. G. Annappa (re-elected)
Ex-Officio members:
Rev. S. W. Ariarajah
Ven. S. D. Horshington

Four representatives were elected from each of the three Churches to serve on the Committee.

In the absence of the newly elected President, Vice President Mr. G. N. Edward proposed a vote of thanks to the outgoing President Mr. V. Canagasabai and Secretary Rev. K. T. Muttiah for their service to the J. C. U. in the past years.

# உதயதாரகை

## UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 140 ] 1 — 2 — 1980 [ இதழ் 5


## கடுகு சிறிதாயினும் காரம் பெரிது

ஆண்டவர் யேசு கடுகுவிதையின் உவமையைக் கூறி அவ்விதை விண்ணரசுக்கு ஒப்பாயிருக்கின்றது என்று கூறி விளங்க வைத்தார் சிறிய கடுகுவிதையானது வளர்ந்து பெரிய மரமாகிக் கிளைகளைப் பரப்பி பல பறவைகள் வந்து தங்கும் எனக் கூறி தேவனுடைய இராச்சியத்தை விளங்க வைக்கும் அதே வேளை ஓர் உண்மையை உணர வைக்கின்றார். அளவிற் சிறியது தொகையில் சிறிது எனப் பேதம் சமூகத்துக்கு இந்த உவமை ஓர் எடுத்துக் காட்டாக அமைகின்றது. உலகத்தில் உள்ள பெரிய வளர்ச்சியடைந்த எந்தக் காரியத்தை நாம் எடுத்து நோக்கினாலும், சிறிய ஆரம்பமே அடித்தளமாய் இருந்தது என்பது புலனாகின்றது. ஒப்பிட்டுப் பார்ப்பதின் மூலம் மனிதன் தனது அறிவுக் கெட்டியபடி பெரிது சிறிது என எடை போடுகின்றான். இதன் விளைவாக எவ்வளவோ சிறந்த காரியம் எல்லாம் அழிந்தொழிந்து போகின்றன. இந்த நிலையினால் நாட்டில், சமூகத்தில், சபையில் குடும்பத்தில் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன திறமை ஒழிக்கப்படுகின்றது, ஆக்கம் குறைகின்றன, ஆதரவு கெடுகின்றன, அன்பு கெடுகின்றது. மனிதத் தன்மை மாறுகின்றது. மக்களைப் புரிந்து கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது.

ஓர் நாடு முன்னேற வேண்டுமேயானால் அங்குள்ள எந்த ஒரு சிறு சமுதாயத்தையும், எந்த ஒரு இனத்தையும், எந்த ஒரு சிறு சமயத்தவரையும் மதித்து உரிய இடத்தைக் கொடுத்து நாட்டின் வளர்ச்சி ஒவ்வொரு சிறு குழுக்களிலும் தங்கியிருக்கின்றது என்ற உண்மையில் உறுதி கொண்டால் உயர்வடையலாம் என்ற கருத்து நிலவ வேண்டும்.

இந்த உண்மையான உறுதியைக் கொண்டே உலகம் உய்ய முடியும் என்ற உயரிய நோக்குடன் தேவன் தாமாகவே மானிட உருவம் எடுத்து உலகத்தில் வந்தார், வாழ்வளித்தார் தேவனை மக்களுக்கு எடுத்துக் காட்டினார். ஆனால் உலகமோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் சாதாரண ஒரு சிறிய சமூகத்தைச் சேர்ந்தவர் எனக் கண்மூடித்தனமாக நடந்துகொண்டது இறுதியில் உண்மையிலே இவர் தேவகுமாரன் தான் என்னும் உண்மையை அறிந்துகொண்டது.

எனவே சிறிய கடுகு விதையைப் போல, சமூகத்தில், நாட்டில், சிறிய குழுவாய் இருந்தாலும் உண்மை என்னும் சாரம் நிறைந்ததாகக் காணப்படின் உயர்வடைவது திண்ணம், எனவே அளவைக் கொண்டல்ல அவற்றில் காணப்படும் சாரத்தைக்கொண்டே வளர்ச்சியுடையது.

இந்த உயர்ந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு உண்மையும் முயற்சியும், ஒழுக்கமும் கடவுள் பயமும் உடையவர்களாய் வாழ்ந்து, நாட்டை, சமூகத்தை சபையை, குடும்பத்தை உயர்வடையச் செய்ய முயல்வோம்.

## கடவுள் அதிசயங்களைச் செய்கிறவர்

கனம் டாக்டர் ஜேம்ஸ் மேதர் போதகரின் ஓர் ஆங்கிலப் பிரசங்கம், தமிழில் கல்முனையைச் சேர்ந்த திருமதி இசபெல் அற்புதநாதன் அவர்களால் மொழி பெயர்ப்பிக்கப்பட்டது.

( முற்றொடர்ச்சி )

பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியுள்ள நூல்களை எழுதியிருக்கும் நூலாசிரியர்களைப் பாருங்கள். இந்தப் பரிசுத்த விவிலிய நூல் உலகெங்கணும் உள்ள சனங்களின் ஆத்தும பசியைப் போக்கும் ஆகாரமாக பல நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு மேலாக இருந்து கொண்டே வருகிறது. மோசே ஒரு சாதாரண ஆட்டு மேய்ப்பன் அவ்வண்ணமே தாவீது. யோசுவா ஒரு யுத்த வீரன் சாலமோன் தேவனது கிருபையினால் மறுரூபமாக்கப்பட்ட பாவி. ஆமோஸ் ஒரு மந்தை மேய்ப்போன். ஆபகூக் தேவாலயத்தில் ஓர் சாதாரண பாடகன். புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்களைப் பார்க்கும்போதும், மத்தேயு ஒரு ஆயக்காரன். லூக்கா ஒரு வைத்தியன் யோவான் ஓர் மீன்பிடிகாரன். பவுல் பரிசேயரில் பரிசேயன். இவைகள் எல்லாம் தேவனின் மகத்துவமான அதிசயங்களை நமக்குக் காண்பிக்கின்றன.

வேதாகமத்தில் நாம் காணும் இச் சம்பவங்களும் உண்மைகளும் நமக்குத் திரும்ப திரும்ப என்னத்தை வற்புறுத்துகிறதென்றால், நமது சீவியத்தில் தேவன் மாத்திரமே "எங்களுக்கு எல்லாவற்றிலும் எல்லாமானவராயிருக்கிறார்." என்பதே. தேவன் ஒருவரே மனிதனின் முக்கியத்துவமும் தேவையுமானவர். தேவனுடைய மகிமையைப் பெற வாஞ்சிக்கிற ஒவ்வொருவருக்கும் தேவன் தனது வல்லமையான வழி நடத்துதலையும் பெலனையும் அருளுவதற்கு ஆவல் உள்ளவராயிருக்கிறார்.

தேவன் மனிதனைச் சிருட்டித்தார். மனிதன் தேவனுக்குரியவன். தேவன் மனிதனின் குறைவுகளையும் தேவைகளையும் நிவிர்த்தியாக்குகிறார். சில வேளைகளிற் தேவன் மனிதனை இருள் சூழ்ந்துள்ள முள்ளுள்ள புதர்களின் மத்தியில் நடத்துகிறார். இதுவும் தேவன் ஓர் மேலான நோக்கத்தைக் கருதியே.

(vi) எனது கடந்த கால வாழ்க்கையைப் பின்நோக்கிப் பார்ப்பேனேயாகில், தேவன் எனது ஆரம்ப வாழ்க்கையில் எனக்களித்த துன்பங்கள் தொல்லைகள் யாவும் அவர் என்மேல் ஆரம்பித்த வாழ்க்கைக்கு அவர் போட்ட திட்டமேயாகும். ஈண்டு விபரித்துக் கூறுகிறேன்.

(vii) எனது சீவியத்தில் தேவன் என்மேல் நடப்பித்த அதிசயங்கள் தேவன் தனது ஊழியக்காரரைத் தெரிந்தெடுப்பதில் மாத்திரமல்ல, அவர்களைப் பயிற்றுவித்துச் சேணம் பூட்டுவதிலும் வல்லவராயிருக்கிறார்.

(அ) சில ஆட்களுக்குத் தாங்கள் தொழில் செய்யுமிடங்களிற் சில வேளைகளிற் சாதகமான சக ஊழியர்களும் சில வேளைகளிற் பாதகமான சக ஊழியர்களும் அமைவதுண்டு ஆனால் இருசாராரும் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரங்களே. எனது குடும்ப சீவியத்தில் எனக்கோர் அன்பான மனைவி அருளப் பட்டிருந்தார். நாற்பத்திரண்டு வருடங்களாக அமைந்த தாம்பத்திய வாழ்க்கையில் 1963-ம் ஆண்டு அவர் மரிக்கும் வரை ஓர் பக்தியுள்ள, பொறுமையான, எனது தொழிலுக்கு உகந்த உற்சாகம் கொடுத்த துணைவியரைத் தேவன் கொடுத்திருந்தார். சில குடும்பங்களில் கணவனுக்கேற்ற மனைவியோ, மனைவிக்கேற்ற கணவனோ அமைவதில்லை. இதுவும் தேவனின் செயல்தான். ஏனெனில் தேவன் தமது ஞானத்தினால் இப்படிப் பட்டவர்களைத் தமது சமூகத்திற்கு நெருங்கச் செய்து, தனது திராட்சத் தோட்டத்துச் செடிகளாக்கிக் கூடிய கனிகளைக் கொடுக்கச் செய்ய வேண்டுமென்று சித்தங் கொள்கிறார். சில போதகமாரின் வாழ்க்கை வரலாறுகளைப் பார்த்தால் அவர்களின் துணையியர் ஏற்ற விதமாய் அமைவதில்லை. ஆனாலும் தேவன் இப் போதகர்களைத் தேவன் தனக்குக் கிட்ட இழுத்து இவர்கள் ஊழியங்களில் பல பேருக்கு, பல குடும்பங்களுக்கு பலவித வழிகளில் ஆசிர்வாதமாயிருக்க ஆக்கியிருக்கிறார்.

(ஆ) எனது மூத்த மகன் அரசாங்க சேவையில் டாக்டராக இருந்தார். எனது ஊழியத்திற்கும் பெரும் உதவியாகவும் ஆசீர்வாதமாயுமிருந்தார். எனினும் தனது நாற்பத்திரண்டாவது வயதிலே இருதய நோயினாற் தாக்கப்பட்டு ஒரு டாக்டரும சிகிச்சை அளிக்க வரமுன்பே சடுதியாய் தனது அன்பு மனைவியரையும் ஐந்து சிறு பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்தார். பிள்ளைகளில் மூவர் ஆண்கள் இருவர் பெண்கள் மனைவியோ இளம் மனைவி. நான் இத்துக்க செய்தியைக் கேட்டுப் பரிதவித்துப் போனேன். ஆயினும் கடந்த 18 வருடங்களாகத் தேவன் தனது அதிசயங்களை அக்குடும்பத்தில் செய்து கொண்டே வருகிறார். பெண்கள் இருவரும் நல்ல படியாக விவாகம் செய்து, நல்ல பிள்ளைகளுடன் கொழும்பில் சொந்த வீடு வாசல்களுடன் சௌகரியமாகச் சிறப்பான கிறிஸ்தவக் குடும்பங்கள் நடத்தி வருகிறார்கள். இரு ஆண்கள் 'சாட்டட்' கணக்கு நிபுணர்களாக சாம்பியாவில் வேலை செய்கிறார்கள். அங்கு கிறிஸ்துவின் சாட்சிகளாகவும் விளங்குகிறார்கள். ஒருவர் கொழும்பில் புடவைத்தொழில் பொறியியல் நிபுணராகப் பணிபுரிகிறார். ஐவரது குடும்பங்களும் கிறிஸ்துவுக்குச் சாட்சிபகரும் குடும்பங்களாக மிளிர்கின்றன. தேவன் அதிசயங்களைச் செய்கின்றவர் என்பது இக் குடும்பங்களில் விளங்குகின்றது. மனிதருக்குத் துன்பங்கள் துயரங்கள் நேரும்போது தேவன் அப்பேர்ப்பட்டவர்களைத் தனது கண்காணிப்பில் இழுத்து அவர்கள்மேல்

( தொடர்ச்சி 3-ம் பக்கம் )

## யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்க நூற்றாண்டு விழா

1879-ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 1980 வைகாசி மாதத்தில் இதன் நூற்றாண்டு விழாவை மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான பல ஒழுங்குகளைச் செய்து வருகின்றது யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களின் விபரங்களடங்கிய நூலொன்றும், (Directory) நூற்றாண்டு நினைவு மலர் ஒன்றும் வெளியிடுவதற்கான ஒழுங்கும், கலை நிகழ்ச்சிகளும், இராப்போசன விருந்தும் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்குவதெனவும் தீர்மானித்துச் செயல்படுத்த ஒழுங்கு செய்யப் படுகின்றது.

## "பாரத ரத்னா" அன்னை தெரேசாவுக்கு

இந்தியாவின் குடியரசுத் தினத்தை ஒட்டி அதிஉயர் கௌரவப் பட்டமான "பாரத ரத்னா" என்னும் விருதை அன்னை தெரேசாவுக்கு வழங்கிக் கௌரவித்துள்ளது. யூகோசிலாவாக்கிய நாட்டுப் பெண்ணான அன்னை தெரேசாவுக்கு "பாரத ரத்னா" என்ற பெயர் வழங்கப்பட்டது. அன்னையின் இனமத பேதமற்ற சேவைக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். அன்னை தெரேசா சென்ற வருடத்துக்கான நோபல் பரிசையும் பெற்றவர் என்பது யாவரும் அறிந்ததே.

## யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணக் கிறீஸ்தவ ஐக்கிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் தை மாதம் 28-ந் திகதி திங்கட் கிழமை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது. 1980-ம் ஆண்டுக்கான உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது தலைவராக யாழ்ப்பாணத் தென்னிந்திய திருச்சபை அத்தியட்சர் மகாகனம் D. J. அம்பலவாணர் தெரிவு செய்யப் பட்டுள்ளார். காரியதரிசியாகக் கனம் J. சர்வானந்தன் அவர்கள் தெரியப் பட்டுள்ளார்.

கடந்த ஏழு வருட காலமாக இச் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றிய திரு. V. கனகசபை அவர்களைப் பாராடிப் பேசிய பொழுது இவரின் தன்னலமற்ற சேவையும், சங்கத்துக்குத் தன்னால் ஆனதைச் செய்து நடாத்தி வந்தார். எனவும் கூறப்பட்டது. காரியதரிசியாகக் கடமையாற்றிய கனம் கிங்ஸ்லி முத்தையா அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. ஆசீர் வாதத்துடன் கூட்டம் முடிவுற்றது.

## இருதய நோய் பற்றிய புதிய கருத்து

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகக் கொழுப்பு அதிகமாகச் சேர்ந்தே இருதய இரத்தக் குழாயின் அடைப்புக்குக் காரணம் என்று கருதிக் கொழுப்புணவை நோயாளிகளுக்கு இருதய மருத்துவர் விலக்கி வைத்தனர், சர்க்கரை, சொகுசான வாழ்க்கை முறையே காரணம் என்று இப்பொழுது அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

ஆதாரம்: "நியூ ஸையன்டிஸ்ட்' நல்வழி

**" He who covers a Transgression seeks Love but he that repeats a matter separates very friends."**

— *Proverb.*

'குற்றத்தை மூடுபவன் அன்பை நாடுகிறான், கேட்டதைச் சொல்லுகிறவனோ பிராணசிநேகிதனையும் பிரித்து விடுகிறான்" என்ற கருத்துச் செறிந்த நீதிமொழித் திருமறையை நாம் ஆராய்ந்து பார்க்கின்றபொழுது அன்பின் தத்துவத்தை அங்கு காணக்கூடியதாக இருக்கிறது. ஆம் வேதாகமத்தின் எப்பகுதியை எடுத்துக் கொண்டாலும் அங்கு அன்பைத்தான் விளக்கப் பட்டிருப்பதைக் காணலாம். இன்று உலகத்தின் எப்பகுதி மக்களை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுதும் அங்கு பிரச்சனைகள், எதிர்ப்புகள், சண்டைகள், குரோதங்கள், வீண்வாதங்கள், எஜமானின் கட்டளைகளை மீறுதல், பொறாமையினால் வாதை செய்தல், நல்லோரைப் பகைத்தல், போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இதற்குக் காரணம் என்ன? அன்பு இல்லாமையே எனலாம், அன்பை ஏற்றுக்கொண்டால் மேற்குறிப்பிடப்பட்ட எதுவும் எம்மை அணுக முடியாதென்பது திருமறை வாக்கேயாம். இம்மூன்று எழுத்தினால் ஆக்கப்பட்டுள்ள இந்த அன்பு என்ற வார்த்தை எவ்வளவு சிறப்புப் பெற்றிருக்கிறதென்பதை நமது நாதர் இயேசு கூறிச் சென்றாரே. ஆம், அன்பாய் இருங்கள் கிறிஸ்து எம்மில் வைத்த ஒரே அன்பிற்காகவே தன்னைத்தானே சிலுவையில் அர்ப்பணித்தாரே. அவர் தன்னை வாதைப்படுத்தினவர்களைப் பார்த்து என்ன சொன்னார்? பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்று அன்புடன் கூறிச் சென்றாரே. இதைவிட ஒரு அன்பின் உண்மைத் தத்துவத்தை இந்த உலகில் நாம் காணத்தான் முடியுமா? ஏன் கடவுளை ஏற்றுக் கொள்பவன் அன்பாகவே இருக்கிறான் என்பது திருமறை வாக்கேயாம். ஆகவே விசேஷமாக கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த வேளையில் அன்பை எவ்வாறு அடைய முடியும் என்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்மிடையே குற்றங்கள் ஏற்படலாம் அல்லது ஒருவர் ஒரு குற்றத்தை செய்து விட்டதாக வைத்துக் கொள்ளலாம். இவ்வாறான நிலையில் கிறிஸ்தவர்களான நாம் என்ன செய்ய வேண்டும். அக்குறிப்பிட்ட குற்றத்தை பலர் மத்தியில் தெரிவிக்காதபடி தடுத்து அதை மூடுவதால் குற்றம் செய்தவன் அன்பால் பிணைக்கப்படுகிறான் அத்துடன் அவன் இன்றும் அன்பினால் ஆகி, குற்றத்தை தொடர்ந்தும் செய்யாமல் இருக்க ஆக்கப்படுகிறார் அதாவது குற்றத்தை வெளிச் சொல்லாமல் தனிப்பட்ட முறையில் புத்திமதிகள் கூறியவர் பேரில் குற்றப்பட்டவன் அன்பு செலுத்தி ஒற்றுமைப் படுவதைக் காணலாம் இதைத்தான் நீதி மொழிகள்," குற்றத்தை மூடுபவன் அன்பை நாடுகிறான் கேட்டதைச் சொல்பவனோ பிராண சிநேகிதனையும் பிரித்து விடுகிறான் என கூறிச் செல்கிறது. ஆகவே ஒருவர் குற்றத்தை மற்றவர்களுக்கு சொல்லும் போது அன்பானது குறைந்து ஒரு உற்ற சிநேகிதனையும் அச்செயல் பிரித்துவிடுகிறதென கூறப்படுகிறது. ஆகவே அன்பின் வழியை ஆராய்ந்து அதை எவ்வாறு பெருக்கிக்கொண்டு போவதென்பது பற்றிய ஆராய்ச்சிகளை கிறிஸ்தவர்களாகிய நாம் இப்பயங்கர ஒற்றுமை, அன்பு இல்லாத உலக வாழ்க்கையில் மேற்கொள்வோமாக.

G. D. D. Savuntharanathan
Youth Adviser
Navaly.

## அனாதை பிள்ளைகள் விடுதி

மானிப்பாயில் தென்இந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதினத்தினால் நடாத்தப்படும் அனாதை பிள்ளைகள் விடுதியில் இன்னும் சில இடங்கள் உண்டு. 6 வயதிற்கும் 18 வயதிற்கும் இடையில் உள்ள அனாதை ஆண்பிள்ளைகள் அனுமதிக்கப்படுவார்கள். பிள்ளைகள் பாடசாலை செல்லும் வசதிகள் உண்டு. உங்கள் விண்ணப்பங்களை, பின்வரும் விலாசத்திற்கு மாசி மாதம் 29-ம் திகதிக்குமுன் (29 - 2 - 1980) அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்
" அருள் மனை "
சிறுவர் இல்லம்,
மானிப்பாய்.

## கசோரினா கடற்கரையில்

நவாலித் திருச்சபைக் கிறிஸ்தவ வாலிபர் குழு ஆலோசகர் திரு G. D. D. சவுந்தரநாதன் தலைமையில் 4-2-80 திங்கட்கிழமை கசோரினாக் கடற்கரையில் ஒரு உல்லாசப் பயணத்தை மேற்கொண்டனர். காலை 9 - 30 மணி தொடக்கம் மாலை திரும்பும்வரையும் பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நாள் முற்றாக ஆனந்தமாய் கழித்தனர்.

## கடவுளின் அதிசயங்களைச்........

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த அதிசயங்களைச் செய்கிறார்.

(இ) நான் ஜெர்மனி தேசத்தில் சுவிசேஷ வேலையின் நிமித்தம் போயிருந்தேன். இலங்கை திரும்பும்போது இங்கிலாந்து சென்று வர யோசித்தேன். கப்பல் "ஆங்கிலக் கால்வாயைக்" கடந்தபோது குளிர் பிடித்து அதிகவருத்தப்பட்டேன். கரையில் உள்ள நியூ காசில் (New Castle) வைத்திய சாலையில் நியூமோனியா நோயுடன் அனுமதிக்கப்பட்டேன். இச் செய்தி புதினப் பத்திரிகைகளில் வெளியானதும் பலர் என்னைப் பார்க்க வந்தார்கள். இவர்களுள் ஆங்கிலக் குடும்பஸ்தன் என்னை மிக அன்பாகப் பராமரித்து நான் சுகப்பட்டதும் என்னைத் தங்களுடன் வந்து ஓய்வெடுக்கும்படியும் எனது நெருங்கிய குடும்பத்தவர் போல் என்னை அன்பால் நெருக்கி ஏவி அழைத்துச் சென்றார்கள். ஓர் நாள் மாலை நேரம் அவர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தபோது, தாங்கள் அவுஸ்திரேலியாவிற்குப் போகும் வழியில், இலங்கை வந்திருந்ததாகவும் கொழும்பில் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த மகா சங்கக் காரியாலயத்தில் என்னைப்பற்றி விசாரித்ததாகவும், நான் கீழைத் தேசத்திற்குச் சுவிசேஷ வேலைக்காகப் போய்விட்டதாக அறிந்தார்கள் என்றும், திருமதி மேதர் தங்களை எங்கள் வீட்டிற்கழைத்துத் தங்களை அன்பாய் உபசரித்த விதத்தையும் அதை கதையாய்க் கூறினார்கள். நான் 116-ம் சங்கீதம் 5-ம் வசனத்தில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறலாயிற்று என்று நினைந்து ஆண்டவருக்குஸ்தோத்திரங்களைச் செலுத்தினேன்.

(ஈ) நான் எனது ஊழிய காலத்தில் ஒரு சேகரத்தை விட்டு இன்னுமொரு சேகரத்திற்கு மாறிப் போயிருந்தேன், அச் சேகரம் குழப்பங்கள் தொல்லைகள் நிறைந்த சேகரமாயிருந்தது. அந் நாட்களில் மாதாந்த கொடைக்கு 'என்வலப்பு' முறை இருக்கவில்லை. புத்தக முறை' இருந்தது. ஒரே அங்கத்தவர் தனது மாதாந்த கொடை ரூபா 5/- என்பதை வெட்டி ரூபா 1/- என்று போட்டார் இதை மற்ற அங்கத்தவர் அறிந்தார்கள். நான் அந்தச் சேகரத்திற்குப் போனபின் அங்கத்தவர்கள் தங்கள் கொடைகளைச் சுருக்கிக் கொண்டார்கள் என்ற கதை பரவிற்று. சில நண்பர்கள் என்னிடம் இவ்விடயத்தைப் பற்றிக் கதைத்த போது எனக்கு உண்மையாகவே துக்கமும் வெட்கமுமாயிருந்தது. ஆகிலும் நான் மனந்தளராமல் அதிசயங்களைச் செய்ய வல்ல தேவனை நோக்கி இடைவிடாது செபித்தேன் கடவுளின் பலத்த கிரியை நடந்தது; ரூபா 5/- ஐ வெட்டி ரூபா 1/- போட்ட அந்த அங்கத்தவர் 6 மாதங்களின் பின் ரூபா 10/- கொடை போட்டார். போட்டது மல்லாமல் 6 மாதங்களுக்குரிய பாக்கிப் பணம் 6 × 9 = ரூபா 54/- ஐயும் செலுத்தினார். இவ்வளவுடன் தேவன் நிறுத்திக் கொள்ளவில்லை. சபையின் கொடை மும்மடங்காக உயர்ந்தது. அங்கத்தவர்களும் பெருகினார்கள். அச்சேகரத்திற்கு இன்னுமொரு ஊழியனையும் அமர்த்த வேண்டியதாயிருந்தது.

(உ) ஒரு முறை நான் எனது விடுமுறைக்காக பண்டாரவளை சென்றிருந்தேன். அங்கேயிருந்த மெதடிஸ்த போதகர் அங்கே ஒரு ஞாயிற்றுக்கிழமை பிரசங்கம் செய்யும்படி அழைத்திருந்தார் நான் பேசப் புகுமுன் என்னைப்பற்றி சில சொற்கள் என்னை அறிமுகம் செய்து வைக்கும் நோக்கமாகக் கூறினார். அப்பொழுது 'சில வருடங்களுக்கு முன் அவருடைய பட்டினத்தில் நான் நடாத்திய சுவிசேஷ பிரபல்ய எழுப்புதற் கூட்டங்களின் பயனாகத் தான் இரட்சிக்கப்பட்ட விதத்தையும் அதன் பின் தான் தேவனின் ஊழியக்காரனாக வந்த விதத்தையும் தன்னால் கூறாமலிருக்க முடியாது" என்று கூறி முடித்தார். உண்மையாகவே இதை நான் முன்பு அறிந்திருக்கவே இல்லை. கேட்டுக் கொண்டிருந்த எனது கண்களிற் கண்ணீர் நிரம்பி வழிந்தது. ஆம்! நாம் சேவிக்கிறதேவன் அதிசயங்களைச் செய்கிறவராகவேயிருக்கிறார்.

(ஊ) இன்றைக்கு நான் இதை எழுதிக் கொண்டிருக்கிற சமயத்தில் 88 வருடங்களைக் கடந்த முதிர் வயதுள்ளவனாயிருக்கின்றேன். நான் சொல்வதை எழுதவோ, எனக்கு இவ் வேலையில் உதவி செய்யக்கூடியவரோ ஒருவரும் இல்லாத போதிலும் அதிசயங்களைச் செய்கிற கடவுள் எனக்குப் புதுப் பெலன் அளித்து அவருடைய சேவையை செய்ய என்னை வல்லமையாய் நடத்துகிறார் என்று கூற விரும்புகிறேன்.

(எ) இன்னுமொரு சிறந்த அநுபவத்தைப் பற்றிக் கூறுகிறேன். எனக்கு எதிராய் வெளியிலும், சுற்றிலும் பல கொந்தளிப்புகள், புயல்கள் எதிர்ப்புகள் இருந்த போதிலும் நான் அவருடைய நாமத்தில் நம்பிக்கையாயிருக்கிறபடியால் மனிதனாற் கொடுக்க முடியாத உள்ளான சமாதானத்தையும் கிருபையையுந் தேவன் தருகிறார். இவ் வண்ணமாகவே தேவன் மேல் நம்பிக்கை வைக்கிற ஒவ்வொரு மனுசனும் இந்த அளப்பரிய கொடையைப் பெறலாம். சங்கீதக்காரன் சங் 46: 1 இல் "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" என்று கூறியிருக்கிறார். சங் 57:1, 59:16, 62:7, 8, 71:7, 91:2, 91:9, 94:22, 142:5, முதலிய வசனங்களும் இதையே கூறுகின்றன. தாவீது இப்படியெல்லாம் எழுதியமைக்குக் காரணம் கடவுளுக்கும் அவருக்குமிருந்த ஐக்கியமும், ஒற்றுமையுமே. கடவுள் புயல்வீசும்போது அடைக்கலம் புகக் கூடிய ஒருவர் மாத்திரமல்ல, அவர் மனிதனின் பெலனுமானவர். செய்யக் கூடாதவைகளைச் செய்யக் கூடிய பெலனை அளிப்பவர், நாம் நமது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கடவுள் மேல் வைக்கும் போது, அவர் நமது நாளாந்த சீவியங்களில் ஏற்படும் துன்ப துரிதங்களில் நமக்குப் போதுமானவராயிருக்கிறார். எங்களுக்கூடாக பலத்த கிரியைகளையும், அதிசயங்களையும் கூட செய்ய வல்லவராயிருக்கிறார். தன்னைத்தான் வெறுத்துத் தேவனைப் பின்பற்றுகிற மனுசன் பாக்கியவான். மத்தேயு 28; 20-ல் கடவுளின் வாக்குத் தத்தத்தைப் பார்ப்போமாக. "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்," என்பதே இவ் வாக்குத் தத்தம். தேவன் நமது பக்கத்திலிருக்கிறார். அநேகர் இதை உணர்வதில்லை. நாம் நம்மை முற்றிலுமாக அவரிடம் ஒப்புவிக்கும் போது அவர் தமது அன்பை நம்மேல் சொரிந்து எங்கள் பக்கத்துத் துணையும் பாதுகாவலுமாயிருக்கிறார், நாங்கள் கடவுளிடம் நம்மைத் தத்தஞ் செய்து நம்மை அவரிடத்தில் உண்மையாக ஒப்புவிக்கும்போது கடவுள் எங்கள் மேல் அதிசயங்களைச் செய்கிறார். மத்தேயு 14:15-21-ல் இயேசு ஐந்து அப்பங்களுடன் ஐயாயிரம் பேரைப் போசிப்பித்த கதையை வாசிக்கிறோம். வசனம் 19-ல் "ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் இயேசு தம் கையில் எடுத்து ஆசீர்வதித்துச் சனங்களுக்குப் பங்கிடும்படி கூறினார்," என்றும் யாவரும் சாப்பிட்டுத் திருப்தியானபின் மீதித் துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறையப் பொறுக்கினார்கள் என்றும் வாசிக்கிறோம்.

நாம் நேசித்து ஆராதிக்கிற தேவன் 'அதிசயங்களைச் செய்கிற தேவன். நாம் நமது இயேசு கிறிஸ்து நாதரை நமது இலக்காகக் கொண்டு பின்வருமாறு பாடிக் கொண்டு அவரைப் பின்பற்றுவோமாக!

" கிறிஸ்துவின் யுத்த வீரரே
[முன்னேறுங்கள்
இயேசுவின் சிலுவையைச்
[சுமந்துகொண்டு
பாதாளத்தின் திறவு கோல்கள்
சபையை மேற்கொள்ள
[மாட்டாதே.
இயேசுவின் வாக்குத் தத்தங்கள்
ஓர் போதும் அழியா,"

*EDITORIAL*

## Development and Human Rights

Three leading aid organisations in Britain — *War on Want*, *Christian Aid* and *Oxfam* — are reported to have recently run into trouble with the country's charity laws. The Charity Commissioner has charged the agencies with overstepping the mark and "engaging in political propoganda."

*Oxfam* was taken to task for an article on land reform in the Third World and *Christian Aid* for funding political action with a view to effecting changes in society.

The *War on Want* came under special scrutiny for publishing liberation struggles exposing vested interests of governments and rousing issues of oppression in many forms, prevalent both overtly and covertly in many countries of the world.

The former Secretary of the *War on Want* was quick to see through the surface of the legal wrangles. "The British Charity Commissioner does not" she said, "like reports on causes of poverty if they are other than natural causes."

In New Zealand, the government has withdrawn the right of tax concessions to CORSO, the country's long established Agency for International Relief because of the organisation's grant to an African liberation movement and its "campaigning publications."

Nearer home in the Phillipines, 500 copies of "Iron Hand, Velvet Glove," a book detailing militarisation in the country, revealing hundreds of cases of serious misconduct of soldiers, previously "undocumented," were seized by the Marcos government, minutes after the copies left the gates of the Printing Press at Metro-Manila. It was the first publication of the infant Ecumenical Movement for Peace and Justice, an amalgam of 21 scattered justice and peace oriented Catholic and Protestant organisations in Manila.

The Foreward of the book describes a pattern of abduction and summary killings, military atrocities against civilian communities and organised government moves, to militarise civilians.

In this global perspective, it is not difficult to discern a similarity of tenor in government policy in many countries with regard to all activities and movements among the people which fail "to stay in line."

T. K. Thomas, the Editor of the *CCA News* puts the situation in very succinct words in an article he contributed some months ago to *One World*:-

> "We have freedom in many countries to preach the gosphel, to speak in tongues, to conduct healing ministries and even to cast out evil spirits as long as the gosphel does not disturb, the tongues do not make sense, the healing does not extend to the diseases of the body politic and the spirits are the ones with no visibility. We rejoice against Jesus's explicit injunction that the spirits submit to us and leave the principalities and powers alone.
>
> That is why we are free and that is the measure of our bondage"

In this context, the *Development Educations' Workshop* held recently in Cuba on the theme "Education for Development, Action for Justice" is timely. We note that it is the first Inter-regional Workshop on *Development Education* organised by the Commission on the Churches Participation in Development (CCPD) of the World Council of Churches.

It is not without significance that one of the important places visited by the 30 participants from 23 countries of the World during the first week of the *Workshop* on Development Education was a psychiatric Hospital in Cuba.

*Development* in any country becomes meaningful only in the framework of a nation's commitment to the diginity of human life "in community" and the creation of social institutions that could serve this goal.

## *IN BRIEF* ..........

- *The Income Support Scheme* will be scrapped from June this year, by the government because of complaints regarding its abuse; The money saved would be utilised for development work in the respective electorates.
- *Sri Lanka's TV Viewers* — a rapidly mounting circle, complain of poor quality programme for the licence fee of Rs. 250/-
- *Sri Lanka's Oil Bill* will in 1980 exceed seven million rupees, according to the Minister of Finance. This represents about 45 percent of our Foreign Exchange earnings.

*The Methodist Church*

## Death of President Emeritus

Rev. Fred S. de Silva, President Emeritus of the Methodist Church of Sri Lanka died in Colombo on Tuesday, 29-1-80. He was 75 years old.

He was Chairman of the Ceylon Methodist Synod from 1960 to 1964 and was the first President of the all Ceylon Methodist Conference.

The funeral took piace on 31-1-80 at the Katunayake Methodist Church premises.

*Letter to the Editor*

## THE JAFFNA CLERGY FELLOWSHIP ON "CHRISTMAS"

There appeared recently in the *Morning Star* the account of a meeting of the Jaffna Clergy Fellowship last November at which the meaning of Christmas for Church and Society was discussed. While some of the conclusions reached at the meeting are useful, others are somewhat ill-considered.

The Fellowship suggests that "the bogey of Christmas Father be banished from our celebration of Christmas". The reference is to Santa Claus who is really St. Nicholas, a fourth century bishop, who like his Master before him, had a great love of children, so much so that he is looked upon as their Patron Saint. It is sad, therefore, that the Fellowghip met in the International Year of the Child and called for his banishment. It also chose to describe the Saint as a "bogey" which according to the Concise Oxford Dictionary means "devil" or "bugbear".

What Santa Claus means to Christian people in other countries may be seen from the following little story. A child called Virginia O'Hanlon once wrote to the New York *Sun* asking if Santa Claus really existed. Its editor, one F. P. Church, wrote a reply himself. This is what he said, "Yes, Virginia, there it a Santa Claus. He exists as certainly as love and generosity and devotion exist, He lives and he lives forever. A thousand years from now, nay, ten times ten thousand years from now, he will continue to make glad the heart of childhood."

The Fellowship's attitude to Santa Claus is possibly coloured by the name by which it calis him. In the variant of English we speak in Ceylon "Uncle John" becomes "John Uncle" with no harm done to anyone. It is different when we turn "Father Christmas" (the correct English name of Santa Claus) into "Christmas Father". The former name suggests the very embodiment of those lovely associations of Christmas that F. P. Church wrote about. "Christmas Father" on the other hand has in our country degenerated into a Christmas clown who, not surprisingly, has roused the ire of the Clergy Fellowship.

The report also speaks of "the wrong idea that Christmas means getting and getting and not giving and giving." One can understand that here the Fellowship is very rightly decrying selfish enjcyment at Christmas, but one must be careful how one says this. Christmas is the celebration of God's culminating gift to mankind, the gift of His own Son, If, in the present context we use the word "Get", we may say that we who "get and get" so much from God, "got" his greatest gift in the Incarnation of Christ. That is why particularly at Christmas time (but not at Christmas time only) we feel impelled to give and give. The getting and the giving thus go together. We must also remember that at Christmas we sing:

> " Where meek souls will receive
> Him still
> The dear Christ enters in ".

It needs meekness and humility to receive, that is, to "get" from God as well as from our fellow-men. Let us get with gratitude all that God and our friends give us out of their love; and let us give liberally to God, to our friends, and not least, to the needy.

Lastly there is the statement, "The Church needs to take its agenda from the world." I think this was first said by a prominent Christian organisatien, but it is a half-truth for all that. The Church's agenda is work and prayer, even as our Lord's agenda was in His life on earth. As for prayer the world knows nothing of it. The Church's work (once again if it copies its Master), has four aspects. (1) Feeding the hungry which, in today's world, will include engagement in development. (2) Healing the sick which comprises many forms of compassionate service. (3) Proclaiming the Word. (4) Turning individuals to God. The world has no agenda to furnish for the third and fourth of these. All that we can say therefore is that the Church should have the world in mind as it gives practical shape from time to time to the agenda that Christ Himself has given it.

**R. E. J. A. Setukavalar**
136, Kachcheri - Nallur Rd,
Jaffna.
26-1-80.

## Unity Week Observed in Jaffna

The Rev. Fr. S. A. Michael Samy OMI the Vicar General of the Roman Catholic Church in Jaffna preached the Unity message at the united service held in Trimmer Hall, Jaffna on Unity Sunday 20 January 1980. Clergy and members of Methodist, Roman Catholic, Anglican and CSI churches participated in the service.

A Seminar on *the Churches' Understanding of the Sacraments* was held in St. Patricks' College, Jaffna on Saturday the 26th January when representative groups from all the four churches participated. The Seminar ended with a fellowship lunch.

## Note by the Editor

The article on "Equality of sexes on the Basis of the Bible" will be continued in our issue 8-2-80.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/8920/78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Saamuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 1st February, 1980.